**செய்தி வெளியீடு எண்:817** **நாள்:20.12.2007**

**செய்தி வெளியீடு**

தமிழகத்தில் கடந்த மூன்று நாட்களாக கனமழை பெய்து வருகிறது. 19.12.2007 அன்றைய தேதியில், மாநிலம் முழுவதும் சராசரியாக 60.74 மி.மீ மழை பெய்துள்ளது. திருவண்ணாமலை, திருவள்ளூர், திண்டுக்கல், விழுப்புரம் மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் 100 மி.மீ அளவிற்கு மேல் மழை பெய்துள்ளது. மாநிலத்தில், 5 இடங்களில் 200 மி.மீ அளவிற்கு மேல் மழை பெய்துள்ளது. விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூரில் மட்டும் அதிக அளவாக 212 மி.மீ மழை பெய்துள்ளது. மாநிலத்தில் 53 இடங்களில் 100 மி.மீ அளவிற்கு மேல் மழை பெய்துள்ளது. தற்போது பெய்து வரும் கனமழையின் காரணமாக வடகிழக்கு பருவமழைக் காலத்தில் பெய்ய வேண்டிய இயல்பான மழை அளவு (normal rainfall) எட்டப்பட்டுள்ளது.

தற்போது பெய்து வரும் மழையின் காரணமாக இதுவரை 38 நபர்கள் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்த கால்நடைகளின் எண்ணிக்கை சுமார் 40 ஆகும். மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து இதுவரை பெறப்பட்டுள்ள அறிக்கையின்படி சுமார் 800 குடிசைகள் மழையால் சேதமடைந்துள்ளன. இவற்றில் 557 குடிசைகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளன. தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய காவிரி டெல்டா பகுதிகள் உள்ளிட்ட மிகவும் பாதிக்கப்பட்ட ஏழு மாவட்டங்களில், தாழ்வான பகுதிகளில் வசித்து வந்த சுமார் 9000 நபர்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மேற்கண்ட ஏழு மாவட்டங்களில் சுமார் 50 கிராமங்களில் தண்ணீர் சூழ்ந்துள்ளது.

மேற்கண்ட டெல்டா மாவட்டங்களில் மட்டும் சுமார் 72,000 ஹெக்டேர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டிருந்த பயிர்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன. இவற்றில் 90 சதவீதம் நெற்பயிர்கள் ஆகும். தொடர்ந்து மழை நீடிக்காவிடில், இன்னும் இரண்டு நாட்களுக்குள் வயல்களில் தேங்கியுள்ள மழைநீர் வடிந்து விடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கரூர் மாவட்டம், அமராவதி ஆற்றில் அதிக அளவில் தண்ணீர் ஓடுவதால் 4 குக்கிராமங்களை தண்ணீர் சூழ்ந்துள்ளதன் தொடர்ச்சியாக 150 நபர்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தற்போது, தண்ணீரின் அளவு குறைந்து வருகிறது.

மதுரை மாவட்டம், மேலூர் அருகே 2 இடங்களில் சாலைகளில் சேதம் ஏற்பட்டதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக போக்குவரத்து திருப்பி விடப்பட்டது.

திருவண்ணாமலை மாவட்டத்தில், செங்கம் ஏரியில் உடைப்பு ஏற்பட்டு, சுமார் 50 ஏக்கர் நிலங்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன.

ஆந்திர மாநிலத்திலுள்ள பிச்சானூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டதால், திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டையில், அமைந்துள்ள தரைப்பாலம் மீது தண்ணீர் ஓடியது. தற்போது இங்கு தண்ணீரின் அளவு குறைந்து வருகிறது.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, மாநில முழுவதும், பாதிக்கப்பட்ட இடங்களுக்கு அமைச்சர்கள் நேரிடையாகச் சென்று தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் உரிய நிவாரணப் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றனர். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அனைத்து அரசு அலுவலர்களும், மழையால் ஏற்பட்டுள்ள பாதிப்பினை சரி செய்ய விழிப்புடன் பணியாற்றி வருகின்றனர்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இம்மழையின் காரணமாக உயிரிழந்துள்ள குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா ரூ.1 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 25 குடும்பங்களுக்கு தலா ரூ.1 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள குடும்பங்களுக்கு விரைவில் நிவாரணம் வழங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாநிலத்தில், பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள சுமார் 9000 நபர்களுக்கு, இதுவரை 18000 உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன. முழுமையாக மற்றும் பகுதியாக சேதமடைந்த குடிசைகளுக்கு, குடிசை ஒன்றுக்கு ரொக்கமாக ரூ.2000/– வீதம் நிவாரணமும், 5 கிலோ அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணெய், 1 வேட்டி மற்றும் 1 புடவை ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன.

தற்போது மழையின் அளவு கணிசமாக குறைந்துள்ளதால், மழை நீர் வடியத் தொடங்கியுள்ளது. மழை நீர் வடிந்தவுடன், மழையால் ஏற்பட்டுள்ள பயிர்ச் சேதம் மற்றும் இதர சேதங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு உடன் தக்க நிவாரணம் வழங்கப்படும். இச்சூழ்நிலையை சமாளிக்கும் வகையில் மாண்புமிகு அமைச்சர்கள், மக்கள் பிரதிநிதிகள், மாநில மற்றும் மாவட்ட நிர்வாகமும் முழு மூச்சுடன் செயல்பட்டு வருகிறது.

சிறப்பு ஆணையர் மற்றும்
வருவாய் நிர்வாக ஆணையர்

*********

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**